# மெட்ரோ சேவை துவக்கம்

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் மெட்ரோ நிலையம் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. 'நிவர்' புயர் எதிரொலியால், நேற்று, வானிலைக்கு ஏற்ப, மெட்ரோ ரயில் இயக்கப்படும் என, நேற்று முன்தினம் இரவு அறிவிக்கப்பட்டது.

புயல், மழை, நேற்று முன்தினம் இரவுடன் முடிந்ததால், நேற்று, பகல், 12:00 மணியில் இருந்து, இரவு, 10:00 மணி வரை, 10 நிமிட இடை வெளியில், மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டன. இன்று, வழக்கம் போல், மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.